கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- திரு.பி.இளங்கோ, பி.எஸ்.சி., எம்.எல்.,

கூடுதல் மாவட்ட நீதிபதி, மயிலாடுதுறை.

அ.சா.1 நாள் 09.02.2023

| | | |
|---|---|---|
| அமர்வு வழக்கு எண். | 78/2022 | |
| பெயர் | மல்லிகா | த/பெ |
| வயது | | தொழில் |
| ஜாதி | | மதம் |
| கிராமம் | | தாலூக்கா |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

முதல் விசாரணை:

நான் மூவலூர் பக்கிரியாப்பிள்ளை தெருவில் வசிக்கிறேன். எனது கணவர் பெயர் தங்கமணி 30 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். எங்களுக்கு சங்கீதா என்கிற புவனேஸ்வரி என்ற மகளும் வைத்தியநாதசாமி என்ற மகனும் இருந்தனர். சங்கீதாவை கீழப்பெரும்பள்ளத்தில் திருமணம் செய்து கொடுத்தோம். எனது மகன் டிரைவராக வேலை பார்த்தார். எனது மகனுக்கு பூவழகி என்பவருடன் திருமணம் நடந்து அவர்களுக்கு கோகுல்ராஜ் என்ற மகன்இருக்கிறார். மேற்படி எனது மருமகள் முதல் பிரசவத்திற்காக அவரது பெற்றோர் வீட்டிற்கு சென்றவர் திரும்பி வரவில்லை. எதிரிகள் எனது கொழுந்தனாரின் மகன்கள். தெரியும். எனது கணவருக்கு 2 சகோதரர்கள். அவர்களில் ஒருவர் பெயர் தவமணி மற்றொருவர் பெயர் மூர்த்தி. எனது கணவர் மற்றும் அவரது சகோதரர்களுக்கு சொந்தமான ஒரு பூர்வீக இடம் இருந்தது. அது கோவிலுக்கு சொந்தமானது. மேற்படி தவமணி இட வசதி குறைபாடு காரணமாக தனியாக இருந்து வந்தார். நாங்களும் மேற்படி மூர்த்தியும் ஒரே இடத்தில் தனித்தனியாக குடியிருந்தோம். மேற்படி மூர்த்திக்கு திருமணம் ஆகிவிட்டது. அவருக்கு இரண்டு மனைவிகள். எதிரிகள் இருவரும் மூர்த்தியின் முதல் மனைவியின் மகன்கள். 1ம் எதிரிக்கு திருமணம் ஆகிவிட்டது. 2 வது எதிரிக்கு திருமணம் ஆகவில்லை. எதிரிகள் இருவரும் வேலைக்கு சென்றுவிட்டு வந்து எங்கள் வீட்டு வராண்டாவில் படுத்து இருப்பார்கள். அப்போது என் மகனுக்கும் திருமணமாகி இருந்ததால் அடிக்கடி குடித்துவிட்டு ஒருவருக்கொருவர் பிரச்சனை செய்து சண்டை போட்டு கொள்வார்கள். அவர்களுக்குள் ஏற்பட்ட சண்டையை நான் விலக்கி விடுவேன். 25.11.2021 அன்று எதிரிகள் இருவருக்கும் என் மகனுக்கும் இடையே மூவலூர் மெயின் ரோட்டில் கடைத்தெருவில் சண்டை நடந்தது. அந்த சண்டையின் போது எனது மகனை எதிரிகள் இருவரும் அடித்து விரட்டியிருக்கிறார்கள். அப்போது ஊர்க்காரர்கள் வந்து என் பிள்ளையை அடித்து கொன்றுவிடுவார்கள் என்று சொன்னார்கள். என் மகனை

மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். மருத்துவமனையில் இருந்த என் மகனை கேட்ட போது எதிரிகள் தன்னை அடித்துவிட்டதாக சொன்னார். பின்னர் என் மகனை வீட்டிற்கு அழைத்து வந்தேன். மறுநாள் பகல் 2 மணி அளவில் என் மகன் வீட்டில் இருந்து கடைத்தெருவிற்கு சென்றார். பின்னர் சிறிது நேரம் கழித்து பாலா என்பவர் எங்கள் வீட்டிற்கு வந்து என் மகனை எதிரிகள் இருவரும் தலையில் அடித்துவிட்டதாகவும் அதில் இரத்த காயம் ஏற்பட்டதாகவும் சொன்னார். பின்னர் என் மகன் மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு பஸ்சில் சென்றிருக்கிறார். பின்னர் நான் சம்பவம் குறித்து கேள்விபட்டு மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் வந்து என் மகனை தேடி பார்த்தேன். என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. கண் எனக்கு சரியாக தெரியவில்லை. பின்னர் என் மகன் மருத்துவமனையில் இருந்து வந்துவிடுவான் என்று நினைத்துக் கொண்டு வீட்டில் இருந்தேன். இருட்டிய பின்னரும் என் மகன் வராததால் அவரை தேடினேன்.பின்னர் பக்கத்து வீட்டை சேர்ந்த ராஜா என்பவரை அழைத்துக் கொண்டு என் மகனை தேடி மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு வந்தோம். அங்கு விசாரித்த வகையில் என் மகன் இறந்துவிட்டதாக கேள்விபட்டேன். பின்னர் மறுநாள் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் தான் நான் கொடுத்ததாகும். அது அசாஆ 1. நான் மருத்துவமனையில் என் மகனின் பிரேதத்தை பார்த்த போது அவனுக்கு தலையில் காயம் இருந்தது. அதன் பின்னர் போலிசார் என் மகனின் பிரேதத்தை பார்வையிட்டு விசாரணை செய்தார்கள். அப்போது நானும் இருந்தேன். போலிசார் விசாரித்தார்கள் நடந்ததை சொன்னேன்.

எதிரிகள் தரப்பிலான குறுக்கு விசாரணை

இல்லை.

கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- திரு.பி.இளங்கோ, பி.எஸ்.சி., எம்.எல்.,

கூடுதல் மாவட்ட நீதிபதி, மயிலாடுதுறை.

| | | |
|---|---|---|
| அ.சா. 2 | | நாள் 09.02.2023 |
| அமர்வு வழக்கு எண். | 78/2022 | |
| பெயர் | பாலமுருகன் | த/பெ |
| வயது | | தொழில் |
| ஜாதி | | மதம் |
| கிராமம் | | தாலூக்கா |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

முதல் விசாரணை:

நான் மூவலூர் பக்கிரியாப்பிள்ளை தெருவில் குடியிருக்கிறேன். என் தகப்பானர் பெயர் மூர்த்தி . என் தகப்பனாருக்கு 2 மனைவிகள். அதில் ஒருவர் தமிழரசி. மற்றொருவர் சாந்தி. மேற்படி சாந்தி தான் எனது அம்மா ஆவார். இறந்த வைத்தியநாதசாமி எனது பெரியப்பா மகன். அசா1 எனது பெரியம்மா. எதிரிகள் எனது தகப்பனாரின் முதல் மனைவியின் மகன்கள். மேற்படி வைத்தியநாதசாமி எப்படி இறந்தார் என்று எனக்கு தெரியாது. போன் மூலம் அவர் இறந்துவிட்டதாக சுமார் ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு சொன்னார்கள். போலிசார் விசாரிக்கவில்லை. கையெழுத்து கேட்டார்கள் போட்டுக் கொடுத்தேன்.

(அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதற்கு அனுமதிக்கப்பட்டது)

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

போலிசார் விசாரித்த போது முத்துக்குமார் என் தம்பி என்று சொன்னேன். என் அப்பாவுடன் பிறந்தவர்கள் தவமணி மற்றும் தங்கமணி ஆவார்கள். மேற்படி இருவரும் இறந்துவிட்டார்கள். மேற்படி தவமணியின் மகன்கள் தனியாக இடம் பார்த்து வீடு கட்டிக் கொண்டு சென்றுவிட்டார்கள். நாங்களும் வைத்தியநாதசாமி குடும்பத்தினரும் ஒரே இடத்தில் தனித்தனியாக குடியிருந்தோம். ஒரு சில நாட்களில் எதிரிகள் இருவரும் வைத்தியநாதசாமி வீட்டு வராண்டாவில் சென்று படுத்துக் கொள்வார்கள். அவ்வாறு போய் படுக்கும் சமயங்களில் எதிரிகளுக்கும் வைத்தியநாதசாமிக்கும் சொத்தை பிரிப்பது சம்மந்தமாக சண்டை நடக்கும் அதனை என் பெரியம்மா சமாதானம் செய்து வைப்பார். 26.11.2021 அன்று மூவலூர் கடைத்தெருவில் சண்டை நடந்ததாக கேள்விபட்டீர்களா என்றால் இல்லை. வைத்தியநாதசாமி எப்படி இறந்தார் என்று எனக்கு தெரியாது. வைத்தியநாதசாமி இறந்த துக்கத்தில் நானும் கலந்துகொண்டேன். எதிரிகள் எனது

தகப்பனாரின் மூத்த தாரத்து மகன்கள் என்பதால் சம்பவத்தை பார்த்துவிட்டு எதிரிகளை காப்பாற்ற சம்பவத்தை பார்க்கவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பிலான குறுக்கு விசாரணை

இல்லை.